# சங்க இலக்கியத்தில் நெய்தல்நில மக்களின் வாழ்வியலும் சமூகப்பண்பாட்டியலும்

மதுரை காமராசர் பல்கலைக்கழக முனைவர் (Ph.D.,) பட்டத்திற்காக அளிக்கப்பெறும் ஆய்வுச்சுருக்கம்

ஆய்வாளர்

**வே. மாரீஸ்வரி**

பதிவு எண்: P3790/2015

நெறியாளர்

**முனைவர் நா.நாகலிங்கம்**

உதவிப் பேராசிரியர், (பணி நிறைவு),
முதுகலைத் தமிழ்துறை,
அரசு கலைக்கல்லூரி,
மேலூர், மதுரை-625 106.

**மதுரை காமராசர் பல்கலைக்கழகம்**
**மதுரை-625 021**

**ஜூலை, 2019**

## சங்க இலக்கியத்தில் நெய்தல்நில மக்களின் வாழ்வியலும் சமூகப்பண்பாட்டியலும்

## ஆய்வுச்சுருக்கம்

சமூக வாழ்க்கைத் தளத்தை நிலைநாட்டிப் பயன்கொள்வதற்காக மனிதன் தனக்குத்தானே சில வாழ்வியல் நெறிமுறைகள் மற்றும் பண்பாட்டுப் பின்புலங்களோடு இயைந்த நம்பிக்கைகளையும் பழக்க வழக்கங்களையும் தங்கள் வாழ்க்கை அனுபவங்களிலிருந்து உருவாக்கி அவற்றை வாழ்வியலோடு இணைத்து உறவாடச் செய்து கொண்டான். குடும்பம், இனம், தொழில், விழாக்கள், வழிபாடுகள், சடங்குகள், வாணிபம் எனப் பன்முகப் பரிமாணங்களோடு சமூகம் கட்டமைக்கப்பட்டது. மக்கள் குடும்பம் மற்றும் சமூக வாழ்வியலில் கொண்டிருக்கும் அசைக்க முடியாத நம்பிக்கைகளும், அந்நம்பிக்கைகள் வழிப்பட்ட பழக்க வழக்கங்களும் மக்களின் பொதுவாழ்வியலின் நெறிகளாக அமைந்திருக்கின்றன. இந்த அடிப்படையில் நெய்தல்நில மக்களின் வாழ்வியலின் தனித்தன்மைகளையும், அவர்களது பண்பாட்டியல் கூறுகளின் சிறப்புத்தன்மைகளையும் ஆராயும்விதமாக இவ்ஆய்வேட்டின் தலைப்பு **"சங்க இலக்கியத்தில் நெய்தல் நில மக்களின் வாழ்வியலும் சமூகப்பண்பாட்டியிலும்"** என்றமைகின்றது.

### ஆய்வுத் தலைப்பு விளக்கம்

**"சங்க இலக்கியத்தில் நெய்தல்நில மக்களின் வாழ்வியலும் சமூகப்பண்பாட்டியலும்"** என்பது இவ்ஆய்வுரையின் தலைப்பாகும். இவ்ஆய்வுரை சங்க இலக்கியத்தில் எட்டுத் தொகை நூல்களில் இடம்பெற்றுள்ள நெய்தல் திணைப் பாடல்கள் அனைத்தையும் எடுத்துக்கொண்டு, அப்பாடல்கள் வாயிலாகக் கூறப்படும் நெய்தல்நில மக்களின் வாழ்வியலையும் சமூகப்பண்பாட்டியல் கூறுகளையும் ஆராய்ந்து விரிவாகவும் நுணுக்கமாகவும் வெளிப்படுத்துவதாக அமைகின்றது.

### ஆய்வின் நோக்கம்

சங்ககால மக்களின் வாழ்வியலை உற்றுநோக்கி அணுகும்போது அக்காலமக்கள் தங்களது வாழக்கைத் தளங்களைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலையென ஐவகை நிலங்களாகப் பாகுபாடு செய்து கொண்டு, அந்தந்த நிலங்களின் பின்புலங்களுக்குத் தக்கவாறு தங்களது வாழ்க்கை முறைகளையும் தொழில்களையும் அமைத்துக் கொண்டு வாழ்ந்திருப்பது புலனாக்கின்றது. இவ்வைந்து நிலமக்களின் வாழ்வியலும் பண்பாடும் சங்ககால வாழ்வியல், சங்ககால மக்கள் பண்பாடு என்னும் பொதுவான கூறுகளைப் பெற்றிருப்பினும், இவற்றை நுட்பமாக அணுகும்போது ஒவ்வொரு நிலமக்களும் ஒவ்வொரு வகையான, தங்களுக்கென்று தனித்தன்மைகள் கொண்ட வாழ்வியல் நெறிமுறைகளையும் சமூகக் கட்டமைப்பினையும் பண்பாட்டுக் கூறுகளையும் கொண்டிலங்குவதை அறிய முடிகின்றன. உழவுத் தொழில் தெரிந்த மருதநில மக்களுக்குப் பாலை நிலத்தின் ஆறலைக் கள்வர்களைப் போல கொள்ளையடித்தல், கொலை செய்தல், வழிப்பறி போன்ற தொழில்கள் தெரியாது. கடலில் மீன்பிடித்த நெய்தல்நில மக்களாகிய பரதவர்களுக்கு உழவுத்தொழில் தெரியாது. மீன்பிடித்தல், உப்புவிளைவித்தல், முத்தெடுத்தல், மீனை உலர்த்துதல் போன்ற கடல்சார்ந்த தொழில்கள் மட்டுமே தெரியும்.

ஒவ்வொரு நில மக்களும் தங்களுக்கென்று தனித்த நில அடையாளம், தொழில், வாழ்க்கைமுறை, வழிபாடு, சடங்கு, பழக்கம், வழக்கம், உணவு, உடை, அணிகலன்

போன்ற பல்வேறு கூறுபாடுகளால் தனித்து நிற்கின்றனர். இந்த அடிப்படையில் நெய்தல்நில மக்கள் தொழில், வாணிபம், உணவு, உடை, அணிகலன், வாழ்வியல்முறை, வழிபாடு, பழக்கம், வழக்கம், நம்பிக்கை போன்ற பல்வேறு பண்பாட்டுக் கூறுகளால் எவ்வாறு தனித்துச் செயல்படுகின்றனர்?, இத்தனித்த நிலைப்பாடுகளால் அவர்கள் எவ்வகையான பண்பாட்டுக் கூறுகளைக் கொண்டிருக்கின்றார்கள்?, சங்க இலக்கியத்தில் நெய்தல்நில மக்களின் வாழ்வியல் நிலைப்பாடுகள் எத்தகையன? என்பனவற்றைக் கண்டறிந்து வெளிப்படுத்துவதே இவ்ஆய்வு முயற்சியின் தலையாய நோக்கமும் போக்குமாகும்.

**கருதுகோள்**

"சங்க இலக்கியங்களில் குறிப்பாக அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை, ஐங்குறுநூறு, கலித்தொகை ஆகிய எட்டுத்தொகை நூல்களில் காணலாகும். நெய்தல் திணைப் பாடல்களில் நெய்தல் நிலமக்களாகிய பரதவர், பரத்தியர் ஆகியோர் பண்பட்ட வாழ்க்கை முறையும், உலக வாழ்வியல் சார்ந்த தமிழரின் உயரிய பண்பாட்டுச் சிந்தனைகளும் நிறைந்து காணப்படுகின்றன" என்பதே இவ்ஆய்வின் கருதுகோளாகும்.

**பயன்பாடு**

ஒருநில மக்களின் வாழ்வியலையும் பண்பாட்டுக் கூறுகளையும் முழுமையாகக் கண்டறிந்து வெளிப்படுத்தும் இந்த ஆய்வு, சங்கத் தமிழர் பண்பாட்டின் ஒரு பகுதியைத் (நெய்தல்நில மக்கள்) துல்லியமாக வெளிப்படுத்துவதாக அமைகின்றது. இவ்வாறு பிற நானில மக்களின் வாழ்வியலையும் பண்பாட்டுக் கூறுகளையும் தனித்தனியாக ஆராய்ந்து, அவற்றைத் தொகுத்துத் தமிழர் பண்பாட்டின் பொதுக் கூறுகளையும், தனிச்சிறப்புத் தன்மைகளையும் முழுமையாக வெளிப்படுத்துவதற்கு இவ்ஆய்வு வழிகாட்டுதலாகவும் பயனுடையதாகவும் அமையும். இத்தகைய ஆய்வுகளால்தான் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை ஆகிய சங்க இலக்கியங்களை மக்கள் அனைவருக்கும் எளிமையாகப் புரிய வைத்துப் பாதுகாத்துப் பயன்கொள்ள இயலும்.

**ஆய்வு எல்லையும் பரப்பும்**

குறுந்தொகை, நற்றினை, அகநானூறு, ஐங்குறுநூறு, கலித்தொகை ஆகிய எட்டுத்தொகை நூல்களில் முறையே 72,100,39,100,32 என்னும் எண்ணிக்கைகளில் இடம்பெற்றுள்ள மொத்தம் 343 நெய்தல் திணைப் பாடல்களை மட்டுமே முதன்மைத் தரவுகளாக எடுத்துக்கொண்டு, அப்பாடல்களின் அடிக்கருத்துக்கள், உள்ளுறை, இறைச்சி, உவமை மற்றும் கருத்துரைகள் வாயிலாக நெய்தல்நில மக்களின் வாழ்வியலையும் பண்பாட்டுக் கூறுகளையும் நுட்பமாக ஆராய்ந்து வெளிப்படுத்துவதே இவ்ஆய்வு முயற்சியின் எல்லையும் பரப்புமாகும்.

**முன்ஆய்வுகள்**

1. பூ. பூங்கோதையின் 'சங்க இலக்கியம் காட்டும் மருதநில மக்களின் வாழ்வியலும் பண்பாடும்' (மதுரை காமராசர் பல்கலைக் கழகம், 2012) என்னும் முனைவர் பட்ட ஆய்வேடும்,
2. இரா. சௌந்தராஜின் 'நெய்தல் திணைப் பாடல்களில் குறியியல்' (மதுரை காமராசர் பல்கலைக் கழகம், 2010) என்னும் முனைவர் பட்ட ஆய்வேடும்,
3. வ.சுப.மாணிகத்தின் 'தமிழ்க் காதல்' என்னும் ஆய்வு நூலும்,
4. க.நெடுஞ்செழியனின் 'தமிழ் இலக்கியத்தில் உலகாய்தம்' (சென்னைப் பல்கலைக் கழகம்) என்னும் முனைவர் பட்ட ஆய்வேடும்,

5. து.சிவராஜின் ‘சங்க இலக்கியத்தில் உளவியல் கொள்கைகள் உளத்தற்காப்பு இயங்குமுறைகள் பற்றிய விளக்க ஆய்வு’ என்னும் முனைவர் பட்ட ஆய்வுரையும்,
6. ஆர்.மாயாண்டியின் ‘அகநானூறு காட்டும் பழந்தமிழர் வாழ்க்கை’ (சென்னைப் பல்கலைக் கழகம், 1972), என்னும் எம்.லிட்.ஆய்வேடும்,
7. R.Shanmugan ஆங்கிலத்தில் எழுதியுள்ள ‘The Social life of the Tamil in the Sangam Age’ (சென்னைப் பல்கலைக் கழகம், 1962) என்னும் எம்.லிட். ஆய்வேடும்,
8. தமிழண்ணலின் ‘சங்க மரபு’ என்னும் நூலாக வெளிவந்துள்ள முனைவர் பட்ட ஆய்வு நூலும்,
9. கதிர்.மகாதேவனின் ‘பழந்தமிழர் வீரப்பண்பாடு’ என்னும் நூலாக வெளிவந்துள்ள முனைவர் பட்ட ஆய்வு நூலும்,
10. ந.சுப்பிரமணியனின் ‘சங்ககால வாழ்வியல் (சங்கத் தமிழரின் அரசு முறையும் சமூகவாழ்வும்)’ என்னும் திறனாய்வு நூலும்,
11. மு.சண்முகப்பிள்ளையின் ‘சங்கத் தமிழர் வாழ்வியல்’ என்னும் திறனாய்வு நூலும்,
12. பெ.மாதையனின் ‘அகத்திணைக் கோட்பாடும் சங்க அகக்கவிதை மரபும்’ (பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை, 2009) என்னும் ஆய்வு நூலும்,
13. ச.அகத்தியலிங்கத்தின் ‘சங்க இலக்கியங்கள் செவ்வியல் இலக்கியங்களே’ என்னும் திறனாய்வு நூலும்,
14. பு,அரங்க.இராதாகிருட்ணனின் ‘சங்க இலக்கியத்தில் விருந்தோம்பல்’ என்னும் பொருளில் அமைந்துள்ள எம்.ஃ.பில்., ஆய்வேடும்,
15. தி.கயல்விழி ரஞ்சனாவின் ‘எட்டுத்தொகை நூல்களில் விருந்தோம்பல்’ என்னும் பொருளில் அமைந்துள்ள எம்.ஃ.பில், பட்ட ஆய்வேடும்,
16. க.ப.அறவாணனின் ‘அற்றைநாட் காதலும் வீரமும் (தொல்காப்பிய அகத்திணை, புறத்திணை இயல் உரைவேறுபாடுகள் - ஒரு திறனாய்வு)’ என்னும் நூலாக வெளிவந்துள்ள முனைவர் பட்ட ஆய்வு நூலும்,
17. கி.வெங்கட்ராமனின் ‘பழந்தமிழ் இலக்கியங்களில் குறிஞ்சிநில மக்களின் வாழ்வியல்’ (மதுரை காமராசர் பல்கலைக் கழகம், 2016) என்னும் முனைவர் பட்ட ஆய்வேடும், இவ்ஆய்விற்கு முன் ஆய்வுகளாகக் கொள்ளப் பெற்றுள்ளன.

**ஆய்வுச் சான்றுகள்**

இவ்ஆய்விற்குரிய சான்றுகளை முதன்மைச் சான்றுகள், துணைமைச் சான்றுகள் என இருவகைப்படுத்தி விளக்கலாம்.

**முதன்மைச் சான்றுகள்**

நெய்தல்நில மக்களின் வாழ்வியலும் பண்பாடும் மட்டும் பிரித்தெடுத்து ஆய்வு செய்யப்படுவதால், சங்க இலக்கிய எட்டுத்தொகை நூல்களுள் அகநானூற்றில் 39 பாடல்கள், குறுந்தொகையில் 72 பாடல்கள், நற்றிணையில் 100 பாடல்கள், ஐங்குறுநூற்றில் 100 பாடல்கள், நெய்தற்கலியில் 32 பாடல்கள் என மொத்தம் 343 நெய்தல் திணைப் பாடல்கள் மட்டுமே இவ்ஆய்விற்கு முதன்மைச் சான்றுகளாகக் கொள்ளப் பெற்றுள்ளன.

**துணைமைச் சான்றுகள்**

இவ்ஆய்வுப் பொருள் தொடர்பாக இதுநாள் வரையில் வெளிவந்துள்ள உரை நூல்கள், திறனாய்வு நூல்கள், ஆய்வு நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், திறனாய்வுக் கட்டுரைகள், ஆய்வுக் கோவைகள், ஆய்விதழ்கள், மலர்கள், ஆய்வேடுகள் ஆகியன இவ்ஆய்விற்குத் துணைமைச் சான்றுகளாகக் கொள்ளப் பெற்றுள்ளன.

**ஆய்வு அணுகுமுறைகள்**

இவ்ஆய்வு உள்ளடக்கப் பகுப்பாய்வு முறையில் **(content Analysis)** அமைந்ததாகும். இவ்ஆய்வு சங்ககாலச் சமூக அமைப்பில் நெய்தல்நில மக்களின் வாழ்வியல் முறைகள் மற்றும் பண்பாட்டுக் கூறுகள் குறித்த ஆய்வாக அமைந்திருப்பதால் இவ்ஆய்வில் சமுதாயவியல் அணுகுமுறை **(Sociological Approach),** சமூகப் பண்பாட்டியல் அணுகுமுறை **(Socio-Cultural Approach)**, உளவியல் அணுகுமுறை, **(Psychological Approach)** முதலான இலக்கிய ஆய்வு அணுகுமுறைகளும், தேவையான இடங்களில் வரலாற்றியல் அணுகுமுறையும் **(Historical Approach)**, ஒப்பியல் அணுகுமுறையும் **(Comparative Approach)** மேற்கொள்ளப் பெற்றுள்ளன; விளக்கமுறைத் திறனாய்வு **(Descriptive Criticism)**, பகுப்புமுறைத் திறனாய்வு **(Analytical criticism)** முதலான இலக்கியத் திறனாய்வு முறைகளும் பின்பற்றப் பெற்றுள்ளன.

**ஆய்வேட்டின் கட்டமைப்பு**

ஆய்வு அறிமுகம், ஆய்வு நிறைவுரை நீங்கலாக இவ்ஆய்வு பின்வரும் ஐந்து இயல்களைக் கொண்டதாகும்.

1. நெய்தல் திணைப்பாடல்களின் பின்புலம்
2. நெய்தல் திணைப்பாடல்கள் காட்டும் சமூக வாழ்க்கை
3. நெய்தல்நில மக்களின் தொழில்களும் வணிகமும்
4. நெய்தல்நில மக்களின் நம்பிக்கைகளும் பழக்கவழக்கங்களும்
5. நெய்தல்நில மக்களின் வாழ்வியலும் சமூகப்பண்பாட்டியலும்

**'ஆய்வு அறிமுகம்'** என்னும் பகுதியில் ஆய்வுத் தலைப்பு விளக்கம், ஆய்வு நோக்கம், கருதுகோள், பயன்பாடு, ஆய்வு எல்லையும் பரப்பும், முன்ஆய்வுகள், ஆய்வுச் சான்றுகள், முதன்மைச் சான்றுகள், துணைமைச் சான்றுகள், ஆய்வு அணுகுமுறைகள், ஆய்வேட்டின் கட்டமைப்பு, இயல் விளக்கங்கள், ஆய்வு நிறைவுரை, மேலாய்வுக் களன்கள், துணைநூற்பட்டியல் என்பன குறித்த செய்திகள் விளக்கப்பெற்றுள்ளன.

**இயல் விளக்கங்கள்**

1) **'நெய்தல் திணைப்பாடல்களின் பின்புலம்'** என்னும் முதல் இயலினுள் கடலும் மனித வாழ்க்கையும், நெய்தலின் வளம், கடற்புயல், கடலலைகள் பற்றிய சொற்சித்திரங்கள், கலித்தொகை காட்டும் கடற்காட்சி, நெய்தல் திணையின் கட்டமைப்பும் சிறப்புக் கூறுகளும், குறிஞ்சி-நெய்தல் பாடுபொருள்களின் ஒப்புமைகள், குறிஞ்சி-நெய்தல் பாடுபொருள்களின் வேற்றுமைகள், பிற திணைக் கலப்பும் திணை மயக்கமும், நெய்தல் திணையின் மாந்தர்கள் படைப்பு, தலைவன் கூற்று, தலைவி கூற்று, தோழி கூற்று, நெய்தல் திணை-நிலமும் பருவமும் பொழுதும், நெய்தல் பாடல்கள் - வகைமைப்பாடு, நெய்தலும் மருதமும், தலைவியின் ஊரைச் சுட்டல்

என்பன குறித்த செய்திகள் நெய்தல் நிலப்பின்புலத்தில் ஆராய்ந்து விளக்கப் பெற்றுள்ளன.

2) **'நெய்தல் திணைப்பாடல்கள் காட்டும் சமூக வாழ்க்கை'** என்னும் இரண்டாம் இயலினுள் சமுதாயம் பற்றிய விளக்கங்கள், சமுதாயத்தில் சமயமும் சாதியும், சமூக அமைப்பும் சமூக உருவாக்கமும், சமூகப் பண்பாட்டுக் கூறுகளும் படைப்பிலக்கியங்களும், சமூகச் சித்திரிப்பு, சமூகச் சிக்கல்கள், சமூக நிறுவனங்கள், குடும்பம் பற்றிய செய்திகள், திருமணம் பற்றிய பதிவுகள், சமுதாயவியல் நோக்கும் போக்கும், இலக்கியமும் சமூகவியலும், நெய்தல் தலைவர்கள், நிலமும் வாழிடமும், நெய்தல் குடிகள், மீன்பிடி கலங்கள், தொடக்க கால, இடைக்கால, நவீனத் தொழில் நுட்பங்கள், மீன்பிடி கருவிகள், மீன்பிடித்தல், பன்மைத் தொழில் நுட்பங்கள், கடற்சூழல் பற்றிய மரபுசார் அறிவு, உப்பு விளைவித்தலும் விற்றலும், முத்துக் குளித்தல், சங்கு குளித்தல், பவளம் எடுத்தல், பெண்களின் சுயாட்சியும் பாலினச் சமத்துவமும் என்பன குறித்த செய்திகள் செறிவாகவும் செம்மையாகவும் ஆராய்ந்து விளக்கப் பெற்றுள்ளன.

3) **'நெய்தல்நில மக்களின் தொழில்களும் வணிகமும்'** என்னும் மூன்றாம் இயலினுள் மீன்பிடித்தல் (மீன்வேட்டை) தொழில், எறி உளியால் கோட்டுமீன் வேட்டையாடல், மீன்பிடித்தலும் கருவாடு காயவைத்தலும், தூண்டிலைப் பயன்படுத்தி மீன் பிடித்தல், நடுச்சாமத்தில் மீன்வேட்டை, உப்பங்கழிகளில் பாணன் மீன்பிடித்தல், தானாகக் கிடைக்கும் சுறாமீன், மீனை வற்றலாக்குதல், மீன்களைக் கூறுகளாக்கி விலைகூறி விற்றல், பரதவர் அயிலை மீன்பிடித்தல், பல்மீன் உணங்களும் படுபுள்ளோட்டலும், எறிஉளி, சாய்க்காடு என்னும் ஊரில் பரதவர் மீன்பிடித்தல், பரதவர் தொழில்கள், கயிற்றுவலையால் கொக்குப் பிடித்தல், 'பறி' என்னும் மீன்பிடி கருவி, பரதவப் பெண்களின் மீன்விற்றல் தொழில், கடலில் முத்தெடுத்தல், நெய்தல் பாடல்களில் பொன்செய் தொழில், இரும்புத் தொழில், பயிர்த் தொழில், தேனெடுத்தல், ஆடை வெளுக்கும் தொழில் முதலான பிற தொழில்கள், வணிகம், உமணர் உப்பு விற்றல், உப்புக்குப் பண்டமாற்று நெல், உப்பு வேளாண்மை, கடற்கரைச் சோலையில் வணிகத்திற்காக உப்புக் குவியல், உப்பும் நெல்லும் இணைவிலை என்பன குறித்த செய்திகள் விரிவாகவும் விளக்கமாகவும் ஆராய்ந்து கூறப்பெற்றுள்ளன.

4) **'நெய்தல்நில மக்களின் நம்பிக்கைகளும் பழக்கவழக்கங்களும்'** என்னும் நான்காம் இயலினுள் நம்பிக்கைகள்-விளக்கம், நம்பிக்கைகளின் தோற்றம், நெய்தல் நிலமக்களின் பேய், உருகெழுதெய்வம், சொர்க்கம், கூற்றுவன், ஊழ், தவம், வேள்வி, இம்மை-மறுமை, பழியஞ்சல் (அலர்) ஆகியன குறித்த நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள்-விளக்கம், தமிழர் பூர்விகம், பழக்கம் சொல்லும் பொருளும், பழக்கம், வழக்கம் என்பனவற்றுக்கான விளக்கங்கள், பழக்கவழக்கம், மரபு என்பன குறித்த கருத்தாக்கங்கள், பரதவர் மாலையில் கள் குடிக்கும் வழக்கம், படிவமகளிர் நோன்பு நோற்கும் வழக்கம், தலைவன் கோவேறு கழுதை பூட்டிய தேரைப் பயன்படுத்தும் வழக்கம், நஞ்சு உண்ணும் பழக்க வழக்கம், ஈகை என்னும் அறம்சார் பழக்க வழக்கம், அந்தணர் பழக்க வழக்க, கனவு காணும் பழக்க வழக்கம், மருத்துவரின் பழக்க வழக்கம், இருடிகள் அழல் மூட்டும் பழக்க வழக்கம்,கோவலர் மாலையில் குழல் ஊதும் பழக்க வழக்கம், தென்முகக் கடவுளின் இருப்புக் குறித்த பழக்க வழக்கம், சூதாடும் பழக்க வழக்கம், கூடலிழைக்கும் பழக்க வழக்கம், இரவில் ஊரைக் காவல் காக்கும் பழக்க வழக்கம், ஊராரின் பொய் கூறும் பழக்க வழக்கம், தண்ணுமை கொட்டும் பழக்க வழக்கம் என்னும் நிலைகளில் நெய்தல்நில மக்களின் நம்பிக்கைகளும் பழக்க வழக்கங்களும் பண்பாட்டியல் நோக்கில் நுட்பமாக ஆராய்ந்து விளக்கப்பெற்றுள்ளன.

5) **‘நெய்தல்நில மக்களின் வாழ்வியலும் சமூகப் பண்பாட்டியலும்’** என்னும் ஐந்தாம் இயலினுள் பண்பாட்டுப் பொதுமைக் கூறுகள், பண்பாடு விளக்கங்கள், பண்பாடு-உட்கூறுகள், பண்பாட்டுக்கூறு, பண்பாட்டுக் கலவை, பண்பாட்டுக் கூறுகளின் தனித்தன்மைகள், உகந்த நிலைப் பண்பாடு, உண்மைப்பண்பாடு, உள்ளார்ந்த பண்பாடு, வெளிப்படைப் பண்பாடு, உட்பண்பாடு, எதிர்ப்பண்பாடு முதலான பண்பாட்டு வகைகள், பண்பாட்டுப் பொதுமைகள், நெய்தல்நில ஊர்கள், பரதவர் வாழிடங்கள், பரத்தமையொழுக்கம், மடலேறுதல், தலைவியின் தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம் தலைவன்-தலைவியர் உறவு நிலை, பேணுப பேணர் பெரியோர், நாடல் சான்றோர், மறந்தோர் மன்ற மறவாம் யாமே, தலைவன் சான்றோன் அல்லன், அனைவராலும் விரும்பப்படும் தலைவன், கண்ணிய ஆண்மை கடவது அன்று, தலைவனின் குடிமை வாய்மை புகழ், தலைவி தலைவனோடு கொண்ட நட்பு, தலைவி தலைவன்மீது கொள்ளும் நம்பிக்கை இன்மை, தலைவன் தலைவியை வருத்துதல், தலைவனின் நட்புக் கடலினும் பெரிது, திருமணம், திருமணம் பேசுதல், பொய்ச்சாட்சி கூறல், சிற்றிலில் கோலம் போடுதல், விளக்கேற்றல், சூளுரை, மகளிர் அணிகலன்கள், உணவும் உடையும், நெய்தல்நில மகளிர் ஒப்பனைகள், தொய்யில் எழுதுதல், கலைகள், கூத்துக்கள், இசை, ஓவியக்கலை, வழிபாடு, வெறியாட்டு, நெய்தல் பாடல்களில் காணலாகும் பாவை, சிறுமணல் வீடு கட்டல், அலவன் விளையாட்டு, கடலாடல், வண்டல் அயர்தல், பூவின்கண் விழும் வண்டினங்களை விரட்டல், ஓரை, வெண்மணலில் புன்னை விதையை அழுத்துதல், கடலில் பாய்ந்து நீராடல், குரவைக் கூத்தாடல், சிற்றில் இழைத்தல், குடும்பவிளையாட்டு முதலான மகளிரின் களவுக்கால விளையாட்டுக்கள், மகளிரின் பொழுதுபோக்குகள், இல்லறம் பேணல், விருந்தோம்பல், இரவில் விருந்தோம்பல், வரையாத்தாரம் வருவிருந்து அயரல், நெய்தற்கலிப் பாடல்களில் ஒழுக்கம் சார்ந்த பண்பாடு, பயன்படு பொருட் பண்பாடு, சந்தனம், கத்தூரி அணியும் பண்பாடு என்பன குறித்த நெய்தல் நில மக்களின் வாழ்வியல் போக்குகள், சமூகப் பண்பாட்டியல் நோக்கில் விரிவாகவும் விளக்கமாகவும் ஆராய்ந்து கூறப்பெற்றுள்ளன.

## ஆய்வு நிறைவுரை

**‘ஆய்வு நிறைவுரை’** என்னும் இப்பகுதியில் **“சங்க இலக்கியத்தில் நெய்தல்நில மக்களின் வாழ்வியலும் சமூகப்பண்பாட்டியலும்”** என்னும் பொருண்மையில் அமைந்துள்ள இவ்ஆய்வுரையில் இயல்தோறும் திறனாய்ந்து கண்டறியப்பட்ட ஆய்வு முடிவுகள் தொகுத்தும் வகுத்தும் தரப்பெற்றுள்ளன.

## மேலாய்வுக் களன்கள்

**‘மேலாய்வுக் களன்கள்’** என்னும் இப்பகுதியில் இனிவரும் ஆய்வாளர்களுக்கு இவ்ஆய்வு முன்வைக்கும் மேலாய்வுக் களன்களும் சிந்தனைகளும் சுட்டிக்காட்டப் பெற்றுள்ளன.

## துணைநூற்பட்டியல்

**‘மேலாய்வுக்களன்கள்’** என்னும் பகுதியைத் தொடர்ந்து இவ்ஆய்விற்குப் பயன்படுத்தப்பெற்ற முதன்மைச் சான்றுகள், துணைமைச் சான்றுகள், ஆய்வு நூல்கள், திறனாய்வு நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், ஆய்வேடுகள் ஆகியன அடங்கிய துணைநூற்பட்டியல் அகரவரிசையில் தொகுத்துத் தரப்பெற்றுள்ளன.